விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 06 சனிக்கிழமை (20.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 152

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கொக்குவில் பகுதியில் நேற்று பாரிய சுற்றிவளைப்புத்தேடுதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் நேற்று இராணுவத்தினரால் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கே.கே.எஸ்.வீதி, ஆடியபாதம் வீதி ,புகையிரத வீதி மற்றும் கோண்டாவில் வீதிகள் உள்ளடங்கிய பகுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டன.

இரவிரவாக குவிக்கப்பட்ட இராணுவத்தினர் நேற்று காலை முதல் தேடுதலில் ஈடுபட்டனர். குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. எனினும் அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். பொலிஸார் சகிதம் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இச் சுற்றிவளைப்புத் தேடுதலானது மதியம் வரை நடைபெற்றது. (ச-05,15)

## ஓமந்தையில் தாக்குதல் 2 இராணுவத்தினர் பலி

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரின் முன்னரங்க காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியா ஓமந்தையில் மருதமடு ஆரிய கிரிட்ட குளம் பகுதியில் நேற்று காலை 9 மணிக்கு இம் மோதல் இடம் பெற்றுள்ளது.

இதில் இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கே.ஏ.ஏ.எஸ்.கொடித்துவக்கு மற்றும் கோப்ரல் டபிள்யு.டி.பி.விஜயதுங்க ஆகியோர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் (08 ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதப் பட்டியலில் புலிகளை இணைக்கவில்லை

## ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகளை இணைத்துக் கொள்ளவில்லை.

அவர்களை அப் பட்டியலில் இணைத்துக் கொள்வது குறித்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் ஒன்று கூடி முடிவெடுப்பார்கள் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ; (08 ஆம் பக்கம் பார்க்க)

### அல்லைப்பிட்டி கொலை தொடர்பான

## சந்தேக நபர்களை ஆஜர்படுத்துமாறு புலனாய்வுத்துறைக்கு நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கையுடன் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராம் றொக்ஸி உத்தரவிட்டுள்ளார்.

அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான சாட்சிகளின் வாக்குமூலம் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டது.

இதில் கொலையாளிகளை அடை யாளம் காட்ட முடியுமென சாட்சிகள் தெரிவித்ததையடுத்து விசாரணை செய்து அறிக்கையுடன் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை சிவில் உடையில் இருந்த சிலருக்கு இப் படுகொலையுடன் தொடர்பிருப்பதாகவும் அவர்களை அடையாளம் காண்பதில் சிரமமிருப்பதாகவும் மற்றொரு சாட்சி நீதிவானிடம் தெரிவித்துள்ளது. (ச-05)

## மக்களுக்கு பாதுகாப்பு வழங்க கடற்படை-பொலிஸ் மறுப்பு

### இடம்பெயரத் தயாராகும் அல்லைப்பிட்டி மக்கள்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி கிராம மக்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என கடற்படையினரும் பொலிஸாரும் ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராம் றொக்ஸியிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அப் பகுதியில் உள்ள 150 குடும்பங்கள் இடம்பெயரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மக்கள் இடம் பெயரும் வேளையிலாயினும் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குமாறு நீதிவான் பணித்துள்ளார்.

அல்லைப்பிட்டியில் கடந்த 13ம் திகதி ஒரே வீட்டில் வைத்து இரு குழந்தைகள் உட்பட 8பேர் ஆயுதாரிகளளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து தமக்கு அப் பகுதியில் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்த மக்கள் இடம்பெயர்வதற்கு பாதுகாப்பு வழங்குமாறு சம்பந்தப்பட்டதரப்பினை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-05)

## பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் அரச ஊழியரின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்றில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்படுவதாக யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

க.பொ.த.உயர் தர தேர்வுக்கு தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு கல்விச் சமூகத்தாலும், பெற்றோர்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை இன்று தொடக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினாலும் ஒட்டுக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான இனப் படுகொலைகளுக்கெதிராகவும் மக்களின் உணர்வினை வெளிப்படுத்தவும் வன்மையான கண்டனத்தை தெரிவிக்கவும் பணியாளர் தங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் என கடந்த 6ம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதனால் பொது மக்கள் சில அசௌகரியங்களை எதிர்கொண்டபோதும் இன அழிவில் இருந்து மக்களை காப்பாற்றுவதற்காக அனைத்துப் பணியாளர்களும் மாணவர்களும் ஒற்றுமையுடனும் உணர்வு பூர்வமாகவும் இப் போராட்டத்தில் பங்கெடுத்து வருகின்றனர். பணிக்குத் திரும்புமாறு இராணுவத்தினரால் விடுக்கப்படும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பணியாளர்கள் தமது உறுதியையும் உணர்வினையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் எதிர்வரும் 22ம் திகதி ஆரம்பமாகும் க.பொ.த.உயர் தரத்தேர்வுக்கு தோற்றும் மாணவர்களின் நலன்கருதி இப் புறக்கணிப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது. எனினும் படைகளின் கொலை வெறியாட்டம் மோசமடையுமிடத்து இன்னும் இறுக்கமான போராட்டமாக இது வெடிக்கும் என்பதையும் தெரிவிக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வாள்வெட்டுக்கு இலக்காகி நால்வர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

காக்கை தீவுப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதலில் நான்கு பேர் வாள்வெட்டுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக இருந்து வந்த கருத்து முரண்பாடு இம் மோதலுக்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இ.கஜன் (வயது 21) க.இராசகுமார் (வயது27) செ.செல்லச்சந்திரன் (வயது 39) மற்றும் செ.பொன்ராசா (வயது 36) ஆகியோரே இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். (ச-15,132,133)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிகம்

# தேசியத்தலைவருக்கு தோள்கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது

**செ. வ. தமிழேந்தி**

தாயக விடுதலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து இயங்கிக் கொண்டிருக்கின்ற தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கு தமிழ் மக்கள் அனைவரும் தோள் கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று தமிழீழ நிதித் துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு நிதித் துறைகணக்காய்வுப்பொறுப்பாளர் அறவாணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி சிறப்புரையாற்றுகையில்,

இலங்கைத்தீவு சிங்கள வருக்கு மட்டும் உரியதே என்று சிங்கள அரசுகள் தமிழினத்தை பல்வேறு வழிகளில் தீவிரமாக அழித்து வருகின்றது. ஆனால் தமிழ் மக்கள் இலங்கைத்தீவில் சிங்களவரும் வாழவேண்டும் இதேவேளை தமிழ் மக்கள் தமது தாயகத்தில் உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் போராடுகின்றார் கள்.

ஆனால் அரசோ வரலாற்றில் தமிழினத்தை அழிக்க வேண்டும் இங்கு சிங்கள இனம் மட்டுமேவாழ வேண்டும் என்று இன அழிப்பை மேற்கொண்டு வருகின்றது. தற்போது அமைதி உடன்படிக்கைஒன்று அப்படியே இருக்கின்றது. அதே நேரத்தில் தமிழர் மீதான கொலைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அரசாங்கம் தன்னுடைய இராணுவத்தோடு இயங்குகின்ற ஒட்டுக் குழுக்கள் மூலம் விடுதலைப்புலிகளுடன் உழைப்பவர்களையும் தமிழ்த் தேசியபற்றாளர்களையும் கொன்று குவித்து வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னால் அமைதி முயற்சிகள் சீர்குலைந்து வருகின்றன. இருந்த போதிலும் தமிழீழத் தேசியத் தலைவர் மிகவும் பொறுமை காத்து இந்த அரசாங்கத்துடன் பேசுவதற்கு முன் வந்தார்.

ஜெனீவாவில் பேச்சுக்கள் நடந்தன. அதில் ஒட்டுக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு உடன்பாடு காணப்பட்டது. அதன் பின்னால் திருகோணமலையில் தமிழ்த் தேசியத்துக்காக உழைத்து விக்னேஸ்வரன் கொல்லப்பட்டார். தொடர்ந்தும் கொலைகள் நடக்கின்றன.

ஆகவே இன்றைய சூழலில் வலுவுள்ள அனைவரும் வயது வேறுபாடு இன்றி போர்ப்பயிற்சி பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது அப்போதுதான் தமிழர் தம்மைப்பாது காகத்துக் கொள்ள முடியும் ஊடுருவல் குழுக்களால் விடுதலைப்புலிகள் மட்டுமன்றி பொது மக்களும் தாக்கப்படுகின்றனர், கொல்லப் படுகின்றனர். இதனால் மக்கள் அனைவரும் போர்ப் பயிற்சி பெறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

தாயக விடுதலைக்காக தன்னை முழுமையாகஅர்ப்பணித்துதொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் தமிழீழ தேசியத்தலைவருக்கு தமிழ் மக்கள் அனைவரும் தோள் கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. விடுதலையைப் பெறவேண்டிய காலம் வந்துவிட்டது என்றார். (து)

**சிறு விளம்பரம்**

**விய வருஷ (2006-2007) பலாபலன்கள்**

எங்கும் விற்பனையாகின்றது. எல்லா ராசிகளுக்கும் ஒரே புத்தகத்தில் பலன்கள். மிதுனம், கடகம் சிங்கத்திற்கு 7 1/2ச் சனி மீனத்திற்கு 5இல் சனி, தனுவிற்கு அஷ்டமத்துச்சனி, மேடத்திற்கு 4 சனி, கன்னி, கும்பத்திற்கு யோகந் தான் சனீஸ்வர வியாழ இராகு கேது மாற்றத்தினால் நிகழப்போகும்பலாபலன்களை முன்கூட்டியேஅறிந்து கொள்ள இன்றே பிரதிகள் வாங்க முந்துங்கள். V.A சிவராசா இல01, பழம்வீதி, கந்தர்மடம்யாழ்ப்பாணம். வெகு விரைவில் அடுத்த முகவரி மாற்றம் இல.56, அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப் பாணம். (430)

# இலங்கையில் போர் வெடிக்கும் அபாயம் உள்ளதென்கிறார் ஜோன் பீற்றர்சன்

(கொழும்பு)

இலங்கையில்கடந்த 2001ஆம் ஆண்டு சிறந்த முறையில் சமாதான செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டதால் அதிகளவான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள வன்முறைகளால் நாடு யுத்தத்தை நோக்கிச் செல்வதற்கான சாத்தியம் அதிகம் இருப்பதாக சர்வதேச ஜனநாயக சங்கத்தின் உப தலை வரும் நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜோன் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை வோஷிங்டனில் அவுஸ்திரேலிய பிரதமர் ஜேன் ஹவார்ட் தலைமையில் நடைபெற்றது. இங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜோன் பீற்றர் சன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சர்வதேச ஜனநாயக சங்கத்தின் பிரதி தலைவரும் அதன் ஆசிய வலயத்தின் தலைவருமான எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்.

இலங்கையின் யுத்தம் ஒன்று ஏற்படுவதனை தடுப்பதற்கும் சமாதானத்தை மலரச் செய்வதற்கும் அழுத்தங்கள் கூடிய யோசனையொன்றை உருவாக்கவும் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் சுயாதீன ஆணைக் குழுக்க்ள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டுள்ளது. இலங்கையில் நீதியான தேர்தல் ஒன்று நடைபெறும் வகையில்தேர்தல்முறையை பலப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டன. வட கிழக்கு-மக்களின் வாக்குரிமையை உறுதிப் படுத்துவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்டுள்ளஇலங்கையின் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பானயோசனைக்கமைய அவற்றை நடைமுறைப்படுத்த சர்வதேச ஜனநாயக சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய பாராளுமன்றஉறுப் பினர்கள்ஊடாக நவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (து)

## இராசி பலன்

**20.05.2006**

**(வைகாசி 6, சனிக்கிழமை)**

**அட்டமி பின்னிரவு 1.16 மணிவரை**

**அவிட்டம் பிற்பகல் 4.48 மணிவரை**

**இராகுகாலம் 8.52-10.22மணிவரை**

**சுபநேரம் 2.52-4.22 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், குடும்பசுகம், பெருமையடைதல், உற்சாகம் |
| இடபம் | அதிகாரம், நண்பர்கள் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தேகநலன். |
| மிதுனம் | புதியதிட்டமிடல், பிதாசிந்தை, திடீர் பயணம், ஆரோக்கியக்குறைவு. |
| கடகம் | அபகீர்த்தி, வேலைச்சுமை, எதிரிகள் தொல்லை, காரியதடங்கல். |
| சிங்கம் | நண்பர்கள் சந்திப்பு, தொழில் சிந்தை, புதிய திருப்பம், முயற்சி கைகூடும். |
| கன்னி | சுபநிகழ்வு, தேகநலன், எடுத்தகாரியம் கைகூடும், வாக்குமேன்மை. |
| துலாம் | வியாபார சிந்தை, வீண்மனஸ்தாபம், பணக்குறைவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | புதியவிடயம், கல்வியில் ஆர்வம், காரிய தாமதம், பிரயாணம். |
| தனுசு | உறவினர் உதவி, காரிய அனுகூலம், போசனசுகம், தேகநலன். |
| மகரம் | வீண்விவாதம், முயற்சி தாமதம், தனவிரயம், குடும்பக்கவலை. |
| கும்பம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, விருந்துபசாரம், ஜனவசியம். |
| மீனம் | நல்லமுயற்சி, பிரயாணம், சுபசெலவு, வீண்அலைச்சல். |

- வளவன்

# பக்கச்சார்பாகச் செயற்படுகிறார் தேர்தல் ஆணையாளர் -ஐ.தே.க.

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நடைமுறையில் இல்லாமையால் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க பக்கச்சார்பாக செயற்பட்டுவருகிறார். கொழும்பு மாநகரசபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றியை ஜீரணிக்க முடியாத அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு தேர்தல்கள் ஆணையாளரும்துணை போகின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு மாநகரசபையை ஒருபோதும் ஐ.தே.க. விடமிருந்து பறித்தெடுக்க முடியாது சுயேச்சைக் குழுவை மக்கள் வெற்றிபெற வைத்ததும் அதற்கப்பால் உள்ள சவால்களை ஐ.தே.க.வெற்றி கொள்ளும் என்றும் அவர் மேலும் கூறினார். நேற்றுமுன்தினம் கொழும்பு எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இன்று இடம்பெறவுள்ள கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கியதேசிய கட்சியின் வெற்றி உறுதியாகிவிட்டது. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத அரசாங்கம் பல்வேறு இடையூறுகளை அரசு ஊடகங்களைப் பயன்படுத்தி மேற் கொள்ள முயற்சிக்கின்றது. ஆனால் கொழும்பு மாநகரசபை மக்கள் மூக்குக் கண்ணாடி சின்னத்திற்கு வாக்களிப்பது உறுதியாகும். சுயேச்சைக்குழுவின் வெற்றியின் பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை சவால்களை ஐ. தே. க.முறியடித்து செயற்படும் இதனால் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

தேர்தல்கள் ஆணையாளர் தொடர்ந்து பக்கச் சார்பாகவே செயற்பட்டு வருகின்றார். அவரின் செயற்பாடுகள் தொடர்பாக எங்களுக்கு சந்தேகம் உண்டு உலகிலேயே இடம்பெற்ற மிக மோசமான தேர்தலாக வட மேல்மாகாண (வயம்ப) தேர்தல் சுட்டிக்காட்டப்படுகின்றது. அப்போது தேர்தல் ஆணையாளர் அரசாங்கம் சார்பாகவே செயற்பட்டார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வாக்காளர்கள் அழுத்தங்களுக்கு மத்தியில் வாக்களிக்காவிட்டால் அங்கு மறுவாக்குப் பதிவை நடத்துவதாக தேர்தல் ஆணையாளர்கூறினார். ஆனால் யாழ்ப்பாணத்தில் தேர்தல்கள் ஆணையாளர் மறுவாக்குப்பதிவைநடத்தவில்லை. தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தேர்தல்கள் ஆணையாளர் பக்கச்சார்பாகவே செயற்பட்டுவருகின்றார். அவரின் செயற்பாடுகள் தொடர்பாக நாங்கள் அதிர்ச்சி அடைகிறோம். சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமையே இவ்வாறான செயற்பாடுகளுக்குக் காரணமாகும்.

தற்போது பதவியில் உள்ள சில ஆணைக்குழுக்கள் சட்ட ரீதியற்றவை. இது தொடர்பாக நாங்கள்சர்வதேசமட்டத்தில்நடவடிக்கை எடுப்போம். கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தலைவாக்கலை நகர சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீன் சின்னத்திலான கட்சிக்கு ஆதரவு வழங்கப்பட்டது. தற்போது மீன் சின்னம் வெற்றி பெற்றதனை யடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி தனது உறுப்பினர் களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பாக ஏன் தேர்தல் ஆணையாளர் சட்டஅறிக்கையை விடுக்கவில்லை.

கடந்த 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் ஜே.வி.பி.சார்பாக வெற்றி பெற்ற அனைத்துஉறுப்பினர்களும் இராஜினாமா செய்த பின்னர் வேறு உறுப்பினர் நியமிக்கப்பட்டனர். அப்போது தேர்தல்ஆணையாளர் ஏன்மௌனமாக இருந்தார் 2002ஆம் ஆண்டு எமது கட்சியும் சில இடங்களில் சுயேச்சைகுழுவுக்கு ஆதரவுவழங்கி அதன் பின்னர் ஐ.தே.க.வின் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். ஆனால் தற்போது தேர்தல் ஆணையாளர் யாருடையதோ தேவைக்காக அறிக்கைகளை முறையற்ற விதத்தில் வெளியிடுகின்றார். இதுஎன்னநியாயம்? வேண்டுமானால் அவர் சட்டத்தின் உதவியை நாடியிருக்கலாம்என்றார். (து)



# வடக்கு-கிழக்கில் பட்டினி அதிகம் ஐ.நா.அமைப்பு அதிர்ச்சித்தகவல்

இலங்கையின் வடக்கு-கிழக்கில் பட்டினிகிடப்போர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக உணவுத்திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெப் டப்ட் டிக் இது தொடர்பில் கூறுகையில்,

உலகம் முழுமைக்கும் பட்டினி தான் பாரிய பிரச்சினையாக உள்ளது. பல்வேறு நாடுகள் இதற்கு முகம்கொடுத் துக்கொண்டிருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக வடக்கு-கிழக்கில் 7 வீதமாகவுள்ளது.

இலங்கையில் மொத்தம் 3 இலட்சத்து 15ஆயிரம் குழந்தைகளுக்கு போதுமான உணவு கிடைப்பதில்லை. பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற உணவுத் திட்டத்தின்கீழ் அவர்கள்உணவினைப் பெற்று வருகின்றனர். ஆனால் 1, 375பாடசாலை களில் மட்டுமே திட்டம் செயற்படுத்தப்படுகிறது இத் திட்டத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (து)

# வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்!

## -ஊடகத்துறை அமைச்சர்

(கொழும்பு)

''வடக்கு கிழக்கு பகுதியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வன்முறைச்சம்பவங்கள் யுத்தமாக உருவெடுக்காது அவற்றை முழுமையாக அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அமைதிப் பேச்சை உடனடியாகத் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது''.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் கொழும்பில் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருகின்ற போதிலும் அவற்றை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசு துரிதமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

புலிகள் மேற்கொண்டுவரும் இந்த வன்முறைகளால் அதிகளவான படையினர் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டும் உள்ளனர் இருந்தாலும் அரசு பொறுமைகாத்து நிலையான சமாதானத்தை வரவழைக்க பாடுபட்டு வருகின்றது.

புலிகள் கேட்டிருக்கும் ஹெலிகொப்டர் வசதிகளை செய்து கொடுத்து அவர்களை உடனடியாக பேச்சு மேசைக்கு அழைத்து வரும் முயற்சியில் அரசு மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இடம்பெறவிருக்கும் இரண்டாம் கட்ட சுற்றுப் பேச்சில் யுத்த நிறுத்தம் உட்பட அரசியல் தீர்வு பற்றியும் பேசப்படும். புலிகள் இது தொடர்பாக எம்முடன் ஒத்துழைத்துச் செயற்படவேண்டும். அப்போதுதான் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்று கிட்டும் என்றார். (து)





சுன்னாகம்

கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

7ஆம் நாள்

இன்று அன்னச்சோடனைக் காட்சி

சுகந்தர அமர்ந்தவா!

உன்னடி தொழுதான் உக்கிர மசிங்கனும்
பொன்னம் பலவா பூமாலை மார்பா
சுன்னைப் பதியில் சுகந்தர அமர்ந்தவா
பின்னைப் பயமேன் பிடித்தமே நின்கழல்

-கலாபூஷணம் சு.துரைசிங்கம்


# படுகொலைகளைக் கண்டித்து கூட்டுறவாளர்கள் பேரணி




(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் படையினரும் துணை இராணுவக்குழுவினரும் இணைந்து நடத்தும் படுகொலைகளைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று முன்தினம் கூட்டுறவாளர்கள் கண்டனப் பேரணி நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலிலிருந்து முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பித்த பேரணி பிரதான வீதி வழியாக அகதிகளுக்கான ஐ.நா.செயலகத்தை சென்றடைந்தது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இக்கண்டனப் பேரணி நடைபெற்றது.

பேரணியின் நிறைவில் அகதிகளுக் கான ஐ.நா.செயலகத்தில்மனு கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசினால் தமிழர் தாயகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதக் கோரத்தாண்டவம் அதிகரித்து இலங்கைத் தீவில் கடந்த 50 ஆண்டுகளாக அரசியல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு சர்வதேச கண்காணிப்பாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எமது மக்கள் வகை தொகையின்றிக் கொல்லப்படுகின்றார்கள்.

தீவகத்தின் அல்லைப்பிட்டி, புளியங்கூடல், யாழ்ப்பாணம், அச்சுவேலி, மந்துவில், நெல்லியடி, திருகோணமலை, சம்பூர், வாகரை எனத் தமிழர் தாயகமெங்கும் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இவை யாவும் ஜெனீவாப் பேச்சுவார்த்தை உடன்பாட்டுக்குப் பின்னரான சம்பவங்களாகும். முப்படைகளும் பெருவாரியாக உயிர்க்கொலையுடன் சொத்தழிவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. தமிழர்கள் இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் கொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகளும் பெண்களுமே அதிகளவில் கொல்லப்பட்டு வருகிறார்கள். இவைகள் தொடர்பாக கொதித்தெழவேண்டிய சர்வதேச அமைப்புகள் மௌனம் சாதிப்பது எம்மை வேதனையும் விரக்தியும் அடைய வைத்துள்ளது. சர்வதேசத்தின் நியாயப்பாடுகள் தொடர்பில் ஐயுறவு ஏற்பட்டுள்ளது.

இணைத் தலைமை நாடுகளும் சர்வதேச சமூகமும் இங்கு இருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கைத் தீவின் சமாதான நடவடிக்கை தொடர்பில் மிகுந்த அக்கறை காட்டவேண்டிய கடப்பாடு உடையவர்களாம். ஆனால் தங்களது கருத்துக்களும் அணுகுமுறைகளும் பக்கச் சார்பாக அமைந்துள்ளது.

அரசும் அதன் படைகளும் புரியும் அடாவடித்தனங்களை தாங்கள் கண்டுகொள்ளத் தவறுகிறீர்கள். தங்களின் கண்காணிப்பிலேயே கொலைகள், அழிப்புகள், வன்முறைகள், கற்பழிப்புகள் என அரச பயங்கரவாதம் நடந்தேறுவதை சுட்டிக்காட்டுகிறோம். இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆகவே தங்கள் சமூகம் இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் உலக சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதியுயர் அரசியல் அந்தஸ்தின் அடிப்படையில் தீர்வினை வழங்குவதற்கான சமாதான முன்னெடுப்புகளை முன்னகர்த்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தாங்கள் எமது வேண்டுகோள்களை நிறைவேற்றுவது சாத்தியமற்றதாயின் எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். (து)

## 500 தாதியர்களை நியமிக்க முடிவு

வடக்கு- கிழக்கு மருத்துவமனைகளுக்கு 500 தாதியரை நியமிக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படவுள்ளது.

தாதியர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் ஜுன் 23ஆம் திகதி வரை வழங்கப்படும். தெரிவுசெய்யப்படவுள்ள தாதியருக்கு 3 ஆண்டுகால பயிற்சி வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## விலை அதிகரிப்புக்கு பேச்சுவார்த்தை

ஒரு லீற்றர் டீசலின் விலையை 3 ரூபாவாலும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலையை 24 ரூபாவாலும் அதிகரிக்கும் வகையிலான பேச்சுவார்த்தை ஒன்றுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்திய எண்ணெய் நிறுவனமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் திறைசேரியிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளன.

எனினும் பெற்றோலின் விலையை உயர்த்துவதற்கு இந்த நிறுவனம் ஆலோசனை தெரிவிக்கவில்லை. சர்வதேசத்தில் எரிபொருளுக்கு விலை அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்ட நிலையிலேயே இப் பேச்சுவார்த்தைக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. (த-9)

# சமாதானப் பேச்சுகளைத் தொடர்வதில் அரசாங்கம் உறுதி

## டோக்கியோவில் அமைச்சர் மங்கள சமரவீர அறிவிப்பு

''இலங்கையில் அண்மைக்காலமாக வன்முறைகள் கட்டுமீறிச் செல்லும் நிலையிலும் அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதில் உறுதியாயுள்ளது'' என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் டோக்கியோவில் தெரிவித்தார்.

''கடந்த வாரம் நடைபெற்ற கடற்சமர் மற் றும் வான் தாக்குதல் உட்பட ஏப்ரல் மாத ஆரம்பத்திலிருந்து இற்றைவரை படையினரும் பொதுமக்களுமாக 270 பேர் பலியாகியுள்ளனர்.

அண்மைய நாட்களில் இடம்பெற்று வரும் ஆத்திரமூட்டல் சம்பவங்களுக்கு அப்பால் பேச்சுக்கள் மூலமான தீர்வொன்றை காண்பதில் அரசாங்கம் உறுதியாகவிருக்கிறது என வர்த்தக சமூகத்தினர் மத்தியில் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தீவிரமற்ற யுத்தம் என்று புலிகள் விமர்சித்தாலும், புலிகளின் தாக்குதல்களுக்கான பதிலடிகள் யுத்தத்தை விடவும் மிகவும் குறைந்தவை என்றே அரசு கூறுகிறது.

1985ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கங்கள் பேச்சுக்களில் ஈடுபாடு காட்டி வந்திருப்பினும் ஜனநாயகத்தை தழுவுவதில் விடுதலைப் புலிகள் நழுவல் போக்கிலேயே உள்ளனர்.

2002ஆம் ஆண்டு செய்துகொண்ட போர் நிறுத்த உடன்பாடு 64ஆயிரம் மக்களை பலிகொண்ட இரண்டு தசாப்தகால யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தியது'' எனத் தொடர்ந்து கூறிய சமரவீர,

சமாதான முயற்சிகளுக்காக நன்றி தெரிவித்தார். சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகள் மீது மேலும் அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளின் பட்டியலில் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்கப்பட்டுள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்தனர். புலிகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்தவும் பேச்சுக்களுக்கு அவர்களை வரச் செய்யவும் புலிகள் மீதான தடை வழிவகுக்கும் என சமரவீர தெரிவித்தார். இதனை சர்வதேச சமூகமே செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (த-6)

# விசாரணைக்குழு நியமனம்

2000ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவு தொடர்பாக விசாரணை நடத்த விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தலா ஒருவருடத்திற்கு 100 மில்லியன்களுக்கு மேல் செலவிடப்பட்டு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதிபதி சிராணி திலக்கவர்த்தனவும் ஏனைய உறுப்பினர்களாக நிசங்க குமாரஉதலாகம, நிமால் எட்வட் திஸாநாயக்க ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று மாதங்களுக்குள் தமது அறிக்கையை ஆணைக்குழு சமர்ப்பிக்க வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (து)

## இன்று ஒரு தகவல்

# செயற்கைப் பூச்சிகள்

ஒரு சிறிய எறும்பு தன்பாட்டிற்குப் பேசாமல் உட்கார்ந்திருந்தது. அது இருக்கும் இடத்தைத் தாண்டி யாராவது போனால் திடீரென்று ஓடிவந்து தாக்குகிறது... வாட்டுகிறது...இது எப்படி சாத்தியம்? விஷயம் என்னவென்றால்... அது நிஜமான எறும்பு அல்ல. செயற்கை எறும்பு. அது ஒரு ரோபோ.

அமெரிக்காவில் உள்ள மாசா சூஸெட்ஸ் இன்டியூட் ஒ·.ப் டெக்னோலஜியின் ஆய்வுகூடத்தில்தான் இது போன்ற செயற்கைப் பூச்சிகளை உருவாக்குகிறார்கள். இவர்கள் உருவாக்கியிருக்கும் எறும்புக்கு ஜென்கிஸ் என்று பெயர். இந்த ரோபோ எறும்பு கொஞ்சம் கூட செயற்கைத் தனம் இல்லாமல் இயற்கையாக சாதாரணமாகப் போகிறது. வருகிறது. கடக்கிறது. திரும்பு கிறது. முன்னால் செல்பவரைத் தாக்குகிறது.

ஒரு பெரிய கணனிக்குப் பதிலாக... ஒரு சிறிய மைக்ரோ புரொசசர் இந்தப் பணிகளைச் செய்வதனால் இதைப் பார்ப்பதற்கு ஒரு உயிருள்ள எறும்பு மாதிரியே இருக்கும். அது மாதிரியே வேலைசெய்யும். இதுமாதிரி எறும்பு மட்டுமில்லை எத்தனையோ விதமான பூச்சிகளை அங்கேயுள்ள விஞ்ஞானிகள் உருவாக்குகிறார்கள்... எதற்காக?

வீட்டு வேலைகள் செய்வதற்காக! அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்காக! செவ்வாய்க் கிரகத்திற்குப் போய் ஆராய்ச்சி செய்வதற்காக இங்கேயுள்ள விஞ்ஞானிகளின் முக்கியமான நோக்கம் என்ன தெரியுமா? ஒரு செயற்கையான உயிரை... இரும்பு உடல்களுக்கு கொடுப்பது. அவற்றை இந்த உலகத்தில் உலாவவிடுவது. அதன்மூலம் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வது அதுதான் குறிக்கோள்.

முதலில் அவர்கள் உருவாக்கியதற்குப் பெயர் அலன். அது ஒரு துடைப்பம். இது சாவி கொடுத்த பொம்மை மாதிரி... சுவற்றில் உள்ள ஓட்டைகளை சுத்தம் செய்யும்... கதவிடம் போகும்... அதில் உள்ள தூசுகளைத் துடைக்கும் அவ்வளவுதான்.

அந்த ஆய்வு கூடத்தில் தயாரான இரண்டாவது ரோபோ ஹெர்பட். அதற்கு வேலை என்ன தெரியுமா? அந்த ஆய்வுகூடத்தில் அங்கங்கே இருக்கும் வெற்றுச் சோடாப் போத்தல்களை சேகரித்துக்கொண்டு வருவது.

இதுபோல் இயந்திரப் பூச்சிகளை அனுப்பி சந்திரனிலும் செவ்வாய்க்கிரகத்திலும் ஆய்வுகள் நடத்தலாமென்று யோசிக்கிறார்கள். அதற்காகவே இவர்கள் என்ன செய்கின்றனர் என்றால் இந்த இயந்திரப் பூச்சிகளின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் நுணுக்கமாகத் தயாரிக்கிறார்கள். நுண்ணிய உணர்திறன் கொண்டதாகச் செய்கிறார்கள். நுணுக்கமாகச் செய்திகளைச் சேகரிக்கும் வகையில் வடிவமைக்கின்றனர். ஜென்கிஸ் என்ற எறும்பு இந்த வகையில் தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

அட்டிலா என்ற சக்திவாய்ந்த ரோபோவையும் விண்வெளி ஆய்வுக்காக வடிவமைத்திருக்கிறார்கள். "ஒவ்வொரு கணனி சில்லும் எழுந்து நடக்கவேண்டும். அதுதான் எங்களுடைய கனவு... அந்தக் கனவு விரை வில் நனவாகும்" என்கிறார் அங்குள்ள ஒரு விஞ்ஞானி.

நமது எறும்புகளைப் பற்றி ஒரு கதை உண்டு. அதாவது... ஒரு பெரிய யானை மிரண்டுபோய் ஓடிவந்து கொண்டிருந்ததாம். வழியில் ஒரு சிறிய எறும்பு நின்று கொண்டிருந்தது. அது அந்த யானையைப் பார்த்து "ஏன் இப்படிப் பயந்து ஓடிவந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது. அதற்கு அந்த யானை சொல்லியது."ஒரு பூனை என்னைத துரத்திக் கொண்டுவருகிறது. அது தான் பயந்து ஓடிவந்து கொண்டிருக்கிறேன்" என்றது.

அதற்கு இந்த எறும்பு சொல்லிய தாம் "அதற்காகவா பயப்படுகிறாய்...இனிமேல் பயப்படாதே. பேசாமல் என் பின்னால் வந்து ஒளிந்துகொள்" என்றதாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இரணைமடு விமானதளம் பாதிப்படைந்துள்ளது !

## விமானப்படைத் தளபதி தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இரணைமடு விமானப்படைத் தளத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா கூறியுள்ளார்.

சிறிலங்கா விமானப் படையினரின் அண்மைய குண்டுவீச்சில் இரணைமடு விமானப்படைத் தளம் சேதமடைந்திருப்பதற்கான புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இரணைமடு தாக்குதல் ஓர் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கையே என்றும் கூறிய டொனால்ட் பெரேரா, முல்லைத்தீவு வான் பகுதியில் புலிகளின் விமானம் இயக்கப்படுவது குறித்து விமானப் படையினர் அவதானமாக உள்ளனர் என்றும் தெரிவித் தார். (து)

# ஆயுதக் கொள்வனவில் இலங்கைக் கடற்படை

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழர் தாயகக் கடற்பிரதேசமான வெற்றிலைக் கேணிப் பகுதியில் கடந்த வாரம் நடைபெற்ற கடற்சமரினையடுத்து நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் இலங்கைக் கடற்படை தீவிரம் காட்டுவதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.அச் செய்தியில் மேலும்,

இஸ்ரேலிய தயாரிப்பான டோரா அதிவேகத் தாக்குதல் படகுகள் தான் இலங்கைக் கடற்படையின் இரத்த நாளமாகும் அது கடற்பிரதேசங்களை எந்நேரமும் கண்காணித்து வருகிறது.

இது தவிர எம்.வி.பேர்ள்குரூஸ் போன்ற பாரிய கப்பல்களில் படையினரை ஏற்றிச் செல்ல பாதுகாப்பாகவும் இப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. சயூரா போன்ற பாரிய கப்பல்கள் ஆழ்கடல் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

சிறிலங்கா கடற்படையில் வலுவான டோரா தாக்குதல் படகுகள் உள்ளன. ஆனால் அவை பழைய தயாரிப்பர்கவும் குறைந்தபட்ச ஆயுதங்களைக் கொண்டு செல்லக் கூடியதுமாக இருக்கின்றன.

கடற்புலிகளின் படகுகளில் ஆயுதங்கள் இருந்த போதும் கடலில் இருதரப்புக்கும் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ மோதல் நடந்தால் கடற்படைக்கே பாரிய சேதம் ஏற்படுகின்றது.டோராப் படகுகளில் 23 எம்.எம். ஆயுதங்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. 2000மீற்றர் வரை தூரம் சென்று இலக்கை அடையக்கூடியது இது. தமிழீழ விடுதலைப் புலிகளும் கூட இதே வகையான ஆயுதங்களை தமது கடற்கலங்களில் பொருத்தியுள்ளனர்.

23எம்.எம்., 25எம்.எம்.மற்றும் 30 எம்.எம். ஆயுதங்களைப் பொருத்துவதற்கான சாத்தியங்களையும் டோராப் படகில் நாம் அனுமதிக்க வேண்டும். மேலும் இலகு மற்றும் கனரக ஆயுதங்களையும் அதில் பொருத்தவேண்டும். மேலும் சூப்பர் டோராப் படகுகளில் ஏவுகணைகளைப் பொருத்தக் கூடியதாகவும் அமைக்கலாம்.

1997ஆம் ஆண்டு இலங்கை கடற்படைப் படகில் 23 எம்.எம். ஆயுதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கு முன்னதாக கடற்படையின் டோராப் படகில் 20 எம்.எம். ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அது 1400மீற்றர் வரை சென்று தாக்கக் கூடியது.

1997ஆம்ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் 23 எம்.எம். ஆயுதங்களைப் பொருத்தியதைத் தொடர்ந்து கடற்படையினரும் அதைப் பொருத்தினர்.

இருப்பினும் 23 எம்.எம். ஆயுதங்கள் போதுமானவை அல்ல என்பதால் அதிக தூரம் சென்று தாக்கக் கூடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கடற்படை தளபதி பரிந்துரைத்தார்.

ஆனால் அவர் ஓய்வு பெறுவதற்கு சிறிது காலத்திற்கு முன்னர் அவரது பரிந்துரைகளை பின்னாளில் கடற் படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற தயாசந்தகிரி மறு ஆய்வு செய்தார்.

முப்படைத் தளபதியாக தற்போதும் தயாசந்தகிரி உள்ளார். கடற்படைக்கு 25 ஆண்டுகள் பழமையான 30எம்.எம்.ஆயுதங்களை இங்கிலாந்து நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கான முன்தொகை கொடுத்து பெற்றது குறித்து அவர் மீது விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவுக்கு கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட அனுப்பிய அறிக்கையின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதையடுத்து கடந்த மார்ச் மாதம் இது தொடர்பிலான விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். இந்த விசாரணை ஆணையத்தின் தலைவராக நீதிபதி நிமால் காமினி அமரதுங்க நியமிக்கப்பட்டார். இந்த அறிக்கை எதிர்வரும் ஜூலை மாதம் தாக்கல் செய்யப்படக்கூடும்.

டோராப் படகு ஆயுதங்களின் தரம் குறித்த சர்ச்சைகளால் தற்போது 23 எம்.எம். ஆயுதங்களே பாவிக்கப்பட்டு வருகின்றன.30 எம்.எம். ஆயுதங்களைக் கொள்வனவு செய்யாத வரையில் கடற்படைக்கு பாரிய இழப்புகள் தான் ஏற்படும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சாலை கடற்பிரதேசத்தில் கடந்த வாரம் இதுவே நடந்தது.

சாலை கடற்பிரதேசத்தில் நடந்த மோதலின் போது கடற்படையின் டோராப் படகில் 30 எம்.எம். ஆயுதங்கள் இருந்திருந்தால் அந்த சமர் 30 நிமிடத்துக்குள்ளாகவே முடிவடைந்திருக்கும். விடுதலைப் புலிகளுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டிருக்கும். ஒருதனிநபரின் செயற்பாட்டால் இந்த நாட்டினது பாதுகாப்பு எப்படி சீர்குலைந்து உள்ளது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இந்தப் படிப்பினைகளுக்குப் பின்னரும் நாம் சரியான ஆயுதங் களைக் கொள்வனவு செய்யாவிட்டால் கடற்படைக்கு இழப்பை ஏற்படுத்துவதாக அமையும்.

700படையினரை தமிழீழ விடுதலைப் புலிகள் அழித்திருந்தால் அதற்கான பொறுப்பாளர் யார்? ஆயுதக் கொள்வனவில் ஏற்படும் தாமதங்களால் மூத்த கடற்படை அதிகாரிகள் கடும் விரக்தியில் உள்ளனர். கடற்படையினது தார்மீக மரியாதை சிதைக்கப்படுகிறது.

இதனி டையே கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை இலங்கை இராணுவத் துக்கான ஆயுதங் களைக் கொள்வனவு செய்தமை குறித்த விசாரணைக்கும் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இந்த ஆணைக்குழுவின் அலுவலகம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மண்டபத்தில் அறை எண் 9 இல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 30 எம்.எம். ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த 30 எம்.எம். ஆயுதங்களானது 3 ஆயிரம் மீற்றர் வரை சென்று இலக்கைத் தாக்கக் கூடியது. மிகவும் பாதுகாப்பான நிலையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் படகுகளை சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்த முடியும் என்று அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (து)

# வடக்கு–கிழக்கில் வன்முறைகளால் அதிக சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

அண்மைக் காலமாக வடக்கு–கிழக்கில் இடம்பெறுகின்ற வன்முறைகள் காரணமாக அதிகமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் பதற்றம், வன்முறைகள் காரணமாக சிறுவர்கள் பலியாகியும், காயமடைந்தும், மனநிலை பாதிக்கப்பட்டும் வருகின்றனர்.

திருகோணமலையில் மட்டும் ஆறு குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பல சிறுவர்கள் காயமடைந்தும் மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர்.

மேலும் வவுனியாப் பகுதியில் 9 சிறுவர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். துப்பாக்கிச் சூடு, கிரனைட் வீச்சு, கிளைமோர்த் தாக்குதல் போன்ற காரணங்களினால் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் சில பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. வட–கிழக்கில் பதற்றம் நிலவும் பிரதேசங்களில் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து மனிதாபிமான உதவிகளில் தங்கியுள்ளன.

எனவே தொடரும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். வன்முறைகளை இருதரப்பினரும் கைவிட்டு ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டும் என்றுள்ளது. (த–9)

# ம.உ.ஆ.குழு தலைவராக நீதிபதி இராமநாதன்

(கொழும்பு)

சிறிலங்காவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற தலைமை நீதிமன்ற நீதிபதி பி.இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிறப்பித்துள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களாக டி.ஜயவிக்கிரம, எஸ்.ஜி.புஞ் சிஹேறவ, நளினி அபேயவர்த்தன மற்றும் எம்.டி. எம்.பசீக் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (து)

# இலங்கை அரசின் நடவடிக்கைகளால் மேற்கத்தேய நாடுகள் அதிருப்தி !

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளை விமர்சித்து வரும் மேற்கத்தேய நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பிலும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இணையத்தளம் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது. நடைமுறை வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தின் முனைப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

அத்துடன் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளப் போவதாகஅரசாங்கம் கூறுகின்றபோதும் அதன் உண்மைத்தன்மை மாறுபட்டதாகவே அமைந்துள்ளது.

மேற்கத்தேய நாடுகளின் சில பிரதிநிதிகள் இந்த விடயத்தில் இந்தியாவின் கருத்துக்களையே பிரதிபலிக்கின்றனர். சமாதான முனைப்புக்கள் விலகிச் சென்றிருப்பதையே அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்சினையை சர்வதேச செயற்பாட்டில் எவ்வாறாவது தீர்க்க வேண்டுமென்ற கொள்கையையே அரசாங்கம் கொண்டிருக்கின்றது.

எனினும் அரசாங்கம் இதற்காக எந்தவொரு நடைமுறையையும் பின்பற்றவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் எதனையாவது செய்தால் அதற்குப் பதிலாக அரசாங்கம் எதனையாவது செய்கின்றது.


இந்தநிலைப்பாட்டை அரசாங்கம் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாதென மேற்கத்தேய இராஜதந்திரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (த–9)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 45

### கண்ணற்ற தீவுக்கு



ரோபன் தீவு முழுமைக்குமான அதிகாரி இவர்களைப் பார்க்க வந்தார். அவரிடம் குறைகளை எடுத்துக் கூறினார் மண்டேலா கவனிப்பதாகக் கூறிப் புறப்படும் முன்னர், டெபு பக்கமாகத் திரும்பி, ''இது என்ன தொப்பை வயிறு. இங்கே சிறையில் வதங்கி வாடி விடும்'' என்றார். டெபு முகம் சிவந்தவராய், மிக அலங்கார டச்சு மொழியில் ''நான் புரட்சிக்கார கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவன். உலகத்தையே குலுக்கிக் கொண்டிருக்கும் கட்சியைச் சேர்ந்தவன். நாங்கள் வெற்றிபெறப் போவது உறுதி. அப்பொழுது நீயும், உன் எஜமானார்களும் வாடி வதங்கி நிற்பீர்கள்'' எனப் பொரிந்து தள்ளினார். ஆச்சரியம். அந்த அதிகாரி பதிலே பேசாமல் நகர்ந்தான்.

இரவு தோறும் புகையிலையும், சிற்றுண்டியும் வந்துகொண்டே இருந்தது. அது சிறைச்சாலையின் முடக்கத்தை நீக்க உதவியது. டெபு நிறையப் புகைப்பார். அடுத்தவர் புகையிலையை மறுநாள் வரையில் வைத்திருப்பார். ஒருநாள் டெபு, மண்டேலாவிடம் "நீ எனக்கு வேண்டுமென்றே புகையிலைக் குறைத்துக் கொடுக்கிறாய்'' எனக் குறைப்பட்டார். அப்படியா நாளை முதல் நான் சரியாகப் பங்கிட்டு கீழே வைத்துவிடுகிறேன். நீங்களே பார்த்து முதலில் உங்கள் பங்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். ''ஆகட்டும்'' எனக் கூறிய டெபு, வார்டர் ரகசியமாக புகையிலை கொண்டு வந்தபோது அதைத் தன்னிடம் தருமாறு கேட்டார். மண்டேலா தவிர மற்றவருக்கும் தெரியக்கூடாது என்ற ஒப்பந்தத்தில் தான் புகையிலை, சிற்றுண்டி வழங்கி வந்தார். இப்பொழுது டெபு தலை காட்டியவுடன் நடுங்கி ஓடிவிட்டார். இதனால், நெல்சன் டெபுவுக்கு புகையிலை தருவதை நிறுத்தினார்.

ஒருநாள் இரவு டெபு, மண்டேலாவை எழுப்பி, ''மண்டேலா த நான் வயதானவன். நான் பல்லாண்டுகளாக ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராடி வருகிறவன். பட்ட பாடுகள் உனக்குத் தெரியும். எனக்குள்ள ஒரே பலவீனம் இந்தப் புகைப்பழக்கம் தான். நீ அதைத் தெரிந்து கொண்டு, புண் விரலைப் பிடிக்கிறாயே நியாயமா? இங்கு நீதான் தலைவன். இப்படித் தண்டிக்கலாமா?'' என்றவுடன் மண்டேலா கலங்கிப் போனார்.

டெபு சொன்னது உண்மை. மண்டேலாவை விட டெபு அதிகம் சிறையிலிருந்தவர். அதிகம் வதைப்பட்டவர். தன் வருத்தத்தைத் தெரிவித்த மண்டேலா, டெபுவுக்கு அதிகப் புகையிலை கொடுக்கத் தொடங்கினார். எப்பொழுதும் சிடுசிடு எனச் சீறும் டெபு. மென்மைப்பட்டவராக அன்போடு பழகுபவராக மாறிவிட்டார்.எது மாற்றியது? புகையிலையா ? அன்பா?

சிறையிலிருந்த காலத்தில் மற்ற கைதிகள் வேலை செய்வதைக் கவனித்தபோது தெரிந்த முகம் ஒன்று இரண்டு இருப்பது தெரிந்தது. அங்கிருந்த இளைஞர்களில் பலர் சுத்த ஆபிரிக்க காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரிந்தது. மண்டேலாவின் உறவுப் பையன் ஒருவனும் இருந்தான். அவர்கள் மண்டேலாவிடம் வந்து, ''அவர் சுத்த ஆபிரிக்க காங்கிரஸில் உறுப்பினரா?'' எனக் கேட்டனர். ''இல்லை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினன்'' என்றார். உடனே அவர்கள் திரும்பிப் போய்விட்டனர். மீண்டும் வந்து, ''எப்பொழுதாவது சுத்த ஆபிரிக்கக் காங்கிரஸில் இருந்தது உண்டா?'' எனக் கேட்டனர். ''இல்லை, இருக்கப் போவதும் இல்லை. எப்போதும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ்தான்'' என்றார். போனவர்கள் திரும்பி வரவே இல்லை.

மறுநாள் சிறையதிகாரி அறைக்கு வந்து மண்டேலாவைத் தவிர மற்வர்களை அழைத்துச் சென்றார். சிறையில் இத்தகைய தருணத்தில் பிரிகிறபோது, அதுவே கடைசி சந்திப்பாகத் தோன்றும். அன்றிரவு தனிமையில் தங்கினார் மண்டேலா. அவருக்கு உணவும் தரப்படவில்லை.

மறுநாள் தீவிலிருந்து பிரிட்டோரியா சிறைக்கு மீண்டும் கொண்டு போனார்கள். அங்கு போனபோது சக போராளிகள் பலர் கைதாகி கொண்டு வரப்பட்டிருப்பது தெரிந்தது. ஆம். முன்னர் மண்டேலா தங்கியிருந்த லிலீஸ்லீவ் பண்ணை விவகாரம் தெரிந்துவிட்டது.அங்கே பொலிஸ் போனபோது, பலர் பிடிபட்டுவிட்டனர். இதில் சிலர் பிற நாடுகளில் பயிற்சி பெற்றுத் திரும்பியவர்கள் .பிரிட்டோரியாவிலும் மண்டேலா தனிமையறையில் அடைக்கப்பட்டார். இருந்தாலும் தகவலறிய முடிந்தது. நாடறிந்த தலைவர்கள் பலரும் கைதாகியிருந்தனர்.

நீதிமன்றத்தில் வாதிட பிராம் பிஷர் வந்து சேர்ந்திருந்தார். ஆனால், பல தடயங்கள் சிக்கிவிட்டதாலும், பலர் பிடிபட்டு விட்டதாலும் வழக்கு சிரமமாகவே இருப்பதோடு, மரண தண்டனையைத் தவிர்ப்பது துர்லபம் என்றே எல்லோரும் கருதினர்.

ஒருநாள் தூக்கமின்றி விழித்திருந்த மண்டேலாவைப் பார்த்த வார்டர், ''தூக்கம் வரவில்லையெனக் கவலைப்படாதே, மண்டேலா தூக்குக்குப் பின் நிரந்தரமாகத் தூங்கலாம்'' என்றான். மண்டேலாத ''ஆமாம் பூமியில் பிறந்த எல்லோருமேதான்.நீயும் உட்பட எல்லோரும் நெடுந்தூக்கத்தில் ஆழ்வது உறுதி'' என்று ஒருபோடு போட்டார்.

அதிலே ஒரு திருப்தி!

பிரிட்டோரியாவிலிருந்து உச்சநீதிமன்றத்துக்கு, ரிவோனியா விசாரணை என வரலாற்றில் இடம்பெற்று விட்ட விசாரணைக்காக , ஒரு அடைக்கப்பட்ட வண்டியில் கொண்டுபோனார்கள். போகும்வழியில்,19ஆம் நூற்றாண்டில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி மாண்டு போன பால்குரூக்னர் என்ற மாவீரனின் சிலை இருந்தது. ''உலகத்தின் முன்னர் மிகுந்த நம்பிக்கையுடன் கூறுகிறேன். நான் வெற்றி பெறுவேனோ, வீழ்வேனோ தெரியாது. ஆனால், இருளைக் கிழித்துக் கொண்டு சூரியன் எழுவது போல் ஆபிரிக்க சுதந்திரம் ஒளியுடன் பிறக்கப் போவது உறுதி'' என்ற அவரது வீரவாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. இதைப் பார்த்தது ஊக்கம் தந்தது.

நீதிமன்றத்தைச் சுற்றி ஆயுதம் ஏந்திய பொலிஸார் நின்றனர். உலகப் பத்திரிகைகள், தென்னாபிரிக்காவின் மிக முக்கிய அரசியல் வழக்கு தொடங்கியது என்றே எழுதியிருந்தன. நீதிமன்றத்துக்குள் நுழைந்த மண்டேலா தென் ஆபிரிக்கக் காங்கிரஸ் சலூட்டை அடித்தார். பார்வையாளர் பகுதியிலிருந்து சுதந்திரப் போர் முழக்கங்கள் எழுந்தன. நீதிபதி சுத்தியலால் தட்டி, அமைதியை நிலைநாட்டினார். நீதிமன்றத்தில் பல நாட்டு அரசுப் பிரதிநிதிகளும், பல நாட்டுப் பத்திரிகையாளரும் இருந்தனர். சிறைச்சாலையில் தரப்பட்ட காக்கிக் கால் சட்டை, தொள தொளத்த செருப்புடன் வந்திருந்தார். ஆர்வத்தோடு திரண்ட மக்கள்தான், சிறையில் வாடுகிறவனுக்கு சிறந்த மருந்தாகும். காவல் மிகக் கடுமையாக இருந்தது.

ஏனெனில் இருவாரங்களுக்கு முன்னால், ஒரு வார்டரை பணம் கொடுத்து ஏமாற்றி விட்டு, கோல்ரிட்ஜீம், ஹரால்டு ஒல்பேயும் மூசி முலாவும் , ஜஸ்ஸாட்டும் தப்பி ஓடிவிட்டனர். அவர்கள் பாதிரியார் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு தங்கனீகாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். இது அரசுக்கு அதிர்ச்சி.போராளிகளுக்கு உயிர்ச்சத்தூட்டிய ஊக்கமருந்து. (தொடரும்)

## மூதூரில் பதற்றம் தொடர்கிறது

(திருகோணமலை)

திருகோணமலையில் மூதூர்ப் பகுதியில் நடைபெற்ற வன்முறைச் செயல்களைத் தொடர்ந்து தமிழ் , முஸ்லிம் பகுதிகளில் பதற்றம் நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



கடந்த 11ஆம் திகதியில் இருந்து நான்கு தமிழர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தரப்பு தெரிவிக்கிறது. ஆனால், அண்மைய காலங்களில் ஐந்து முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் முஸ்லிம் தரப்பு தெரிவிக்கிறது.

மூதூர் நகரப் பகுதியில் தமிழர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் குறித்து முஸ்லிம் பிரதிநிதிகள் கருத்து வெளியிடாமல் இருப்பது தங்களுக்குக் கவலையை அளிப்பதாக திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். இந்த வன்செயல்களுக்குக் காரணமான நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க முஸ்லிம் தலைமை முன்வரவேண்டும் எனவும் எழிலன் தெரிவித்தார்.

தற்போதுள்ள பதற்றமான சூழலில், முஸ்லிம் வர்த்தகர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கும், தமிழ் வியாபாரிகள் முஸ்லிம் பகுதிகளுக்கு செல்வதும் குறைந்துள்ளதாக மூதூர் மஜ்லிஸ் மசூராவின் செயலாளர் எம்.எம். ஜவாத் தெரிவித்துள்ளார். தமிழ், முஸ்லிம் நல்லுறவினை வளர்க்க விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## ஐ.தே.கவின் கருத்துக்கு ஜே.வி.பி கண்டனம்

(கொழும்பு)

நாட்டின் முக்கிய பொறுப்பான பதவியிலுள்ள தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை பக்கச்சார்பாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டுவது தவறானது என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித் தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

கொழும்பு மாநகரசபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சுயேச்சைக் குழுவொன்றக்கு ஆதரவளிக் கின்றமை தொடர்பாக எழுந்த சிக்கலையடுத்து தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையை நாங்கள் ஏற்றுக்கொள்



கின்றோம்.

ஜே.வி.பியினைப் பொறுத்தவரை தேர்தல்கள் ஆணையாளர் மிகவும் நடுநிலையாகவும் நேர்மையாகவும் செயற்படுகின்றார். இதில் எந்தவித மான சந்தேகமும் இல்லை என்றார். (தி)

## 20 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறும்

(கொழும்பு)

20 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்புக்கள் இன்று காலை 7.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இதற்காக 875 வாக்களிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2ஆயிரத்து 768வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதில் 312பேர் தெரிவுசெய்யப் படவுள்ளனர்.சுமார் 11 இலட்சம் பேர் இன்றைய தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள். (த-9)

## பாதசாரிகளைப் புறந்தள்ளும் பஸ், மினிபஸ் ஓட்டுநர்கள்

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச.பஸ்வண்டிகளும் தனியார் சிற்றூர்திகளும் தெருவில் நடமாடும் பொதுமக்களைப் பற்றிச் சிறிதளவும் கரிசனையின்றி வாகனங்களை எவ்வித சமிக்ஞையும் இல்லாமல் பஸ் தரிப்பிடம் அல்லாத இடங்களில் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறுக்குவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிகிறது.

இடைவழியில் யாராவது ஒரு பயணி கை காட்டினால் அவர்களை ஏற்றவும், பஸ் தரிப்பிடம் அல்லாத இடத்தில் பயணிகளை ஏற்றவும் படுவேகத்தில் வரும் வாகனங்கள் திடீரென நிறுத்தப்படுவதால் கால் நடையாகவோ, சைக்கிள் , மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களிலோ செல்பவர்கள் திடுக்கிடும் அனுபவத்தைப் பெறுபவர்களாக இருக்கிறார்கள்.

இவ் வாகனங்களை அதற்கென குறிக்கப்பட்ட இடங்களில் நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் அங்கலாய்க்கிறார்கள். (து-132,133)

## பிச்சைக்காரர் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நிறுத்தப்படும் பஸ் வண்டிகளுக்குள் ஏறி பயணிகளிடம் பிச்சை கேட்டு உபத்திரவப்படுத்தும் பிச்சைக்காரர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பயணிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

மதுபோதையுடன் வண்டிக்குள் வரும் சில பிச்சைக்காரர்கள் பணம் கொடுக்க விரும்பாதவர்களை தூஷண வார்த்தைகளால் கேவலமாகப் பேசி இம்சிப்பதாகவும், பஸ் நடத்துநர்களும் ஓட்டுநர்களும் இதனைக் கண்டும் காணாதவர்கள் போல இருக்கிறார்களேயன்றி இத்தகைய செயல்களை தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை எனவும் பஸ் பயணிகள் கூறுகிறார்கள். இத்தகைய சம்பவங்கள் சிற்றூர்திகளிலும் நடைபெறுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து தகுந்த நடவடிக்கையெடுத்து பிச்சைக்காரர் தொல்லையிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டுமென மேலதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறார்கள். (து-132, 133)



அமெரிக்காவில் மியாமி நகரில் பொதுமக்களுக்கு தொந்தரவு கொடுத்து வந்த மிகப்பெரிய முதலை பிடிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படுகிறது

# பிரேசிலில் கலவரம் 81 பேர் இதுவரை பலி

பிரேசிலின் சாவோ போலோ மாகாணத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. கடந்த நான்கு தினங்களில் 81பேர் பலியாகியுள்ளனர்.

இறந்தவர்களில் 32பொலிஸார் 8 சிறைச்சாலை பாதுகாவலர்கள் 4பொது மக்கள் ஆகியோரும் அடங்குவர். ஏனையோர் துப்பாக்கி தாரிகள் என பாதுகாப்பு அதிகாரிகள் ரொய்ட்டர் செய்திச்சேவைக்கு தெரிவித்தார்கள்.

சிறைக்கைதிகளில் ஒரு சாரார் பிறிதொரு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதால் சிறைக்கூடங்களில் கலவரங்கள் ஆரம்பமாகின. பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல்களை சேர்ந்தவர்களே பெருமளவில் சிறைக்கூடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

சிறைச்சாலைக் கலவரங்களை முடுக்கிவிடும் கும்பல்களை வீதிகளில் வன்முறைகளையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. இதுவரைபல பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கடைகள் உடைக்கப்பட்டுள்ளன. அரசாங்க உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. (து)

# சீனா, வியட்னாமில் புயல்; 99 மீனவர்களைக் காணோம்

சீனா வியட்னாம் நாடுகளைப் புயல் தாக்கியதில் மணிக்கு 170கி.மீ வேகத்தில் காற்று வீசியது. இதில் சீனாவில் 8 பேர் பலியானார்கள். வியட்னாமில் கடலில், மீன் பிடிக்கச்சென்ற 99மீனவர்கள் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை.

மணிக்கு 170 கி.மீ.வேகத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டில் 37பேரை பலி கொண்ட புசாஞ்சு எனப்படும் புயல் இப்போது தெற்கு சீனா அருகே நகர்ந்து அதைத் தாக்கியுள்ளது. இதன் காரணமாக் மணிக்கு 170 கி.மீ.வேகத்தில் காற்று வீசியது. பலத்த மழையும் பெய்தது.

ஷான்டோவ், ஷியாமின் ஆகிய நகரங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. ஷான்டோவ் நகரில் 8பேர் பலியானார்கள். அவர்களில் 2 பேர் சிறுவர்கள் மழைக்குத் தாங்காமல் வீடு இடிந்து விழுந்ததில் அந்த 2 சிறுவர்களும் பலியானார்கள். ஷான்டோவ் நகரில் அனைத்து வீதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

புயல் மழை காரணமாக தாழ்வான மற்றும் கடலோரப் பகுதிகளில் வசித்த மக்கள் 9 லட்சம் பேர் அங்கு இருந்து அப் புறப்படுத்தப்பட்டனர். புயலில் பெல்ஜியம் நாட்டுக் கப்பல் ஒன்றுசிக்கிக்கொண்டது. தாதுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்தபோது சீனக் கடலில் இக்கப்பல் தத்தளித்தது. அதில் இருந்த 8 சிப்பந்திகளும் கடலில் தத்தளித்தனர். அவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்காக மீட்புக் கப்பல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. (து)

WORLD NEWS உலக தரிசனம்

# நேபாள மன்னரின் அதிகாரத்தை குறைக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் தாக்கல்

(காத்மண்ட்)

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரரின் அதிகாரங்களைக் குறைக்கவும், மன்னர் தான் இராணுவத் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தை பறிக்கவும் வகை செய்யும் தீர்மானத்தை பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

முன்னதாக இந்த தீர்மானத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்மானத்தின்படி பிரதமர் தலைமையில் தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஏற்படுத்தப்படும். நேபாளம் இந்து முடியரசு என்றில்லாமல் மதச்சார்பற்ற குடியரசு என்று அழைக்கப்படும்.

நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றப் பிரதிநிதிகள் முடிவு செய்வார்கள். இராணுவ தலைமைத் தளபதி யார் என்பதை அமைச்சரவை முடிவு செய்து அறிவிக்கும். நாடாளுமன்றம் அதிக அதிகாரங்கள் கொண்டதாக இருக்கும். மன்னரின் செயல்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்ப லாம்.

2005பெப்ரவரியில் ஷெர்பகதூர் தூபா தலைமையிலான அரசை திடீர் உத்தரவு மூலம் மன்னர் பதவி நீக்கம் செய்தார். பின்னர் 14 மாதங்கள் தனது நேரடி கண்காணிப்பில் ஆட்சி செலுத்தினார்.

இதனிடையே கடந்த மாதம் மன்னர் ஆட்சிக்கு எதிராக 7கட்சி கூட்டணி பெரும் கிளர்ச்சி பேரணி நடத்தியது. இதையடுத்து மன்னர் அடிபணிந்து ஆட்சி அதிகாரத்தை 7 கட்சி கூட்டணி அரசிடம் ஒப்படைத்தார். (து)

# ஆப்கானிஸ்தானில் மோதல் 60 தலிபான்கள் பலி!

(காந்தஹார்)

ஆப்கானிஸ்தான் தெற்கு பகுதியில் கடந்த புதன்கிழமை இரு இடங்களில் நடந்த கடும் சண்டையில் தலிபான் தீவிரவாதிகள் 60 பேரும் 13 பொலிஸாரும் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக உள்துறை அமைச்சக அதிகாரி யூசுப் ஸ்டானிஸாய் கூறுகையில்,

ஹெல்மண்ட் மாகாணத்தில் முஸாகலா மாவட்டத்தில் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் அந்த இடத்தை சுற்றிவளைத்தனர். அப்போது பொலிஸாருக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கும் பலமணி நேரம் கடும் சண்டை நடந்தது.

இதில் 40 தலிபான் தீவிரவாதிகளும், 13பொலிஸாரும் உயிரிழந்தனர். காந்தஹார் மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகளுக்கும் ஆப்கான் பாதுகாப்புப் படை அமெரிக்க கூட்டுப்படையைச் சேர்ந்த கனடா வீரர்களுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதில் 18 தலிபான்கள் கொல்லப்பட்டனர். கனடா நாட்டு வீராங்கனை ஒருவர் இச்சண்டையில் உயிரிழந்தார். 35 தலிபான்கள் பாதுகாப்புப் படையினரிடம் பிடிபட்டனர் என்றார். (து)

# 1000 கோடி ரூபா செலவில் கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டம் அமுல்

## முதல்வர் கருணா நிதி தகவல்

சென்னைக்கு ரூ.1000 கோடி செலவில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்துக்கு விமோசனம் கிடைக்கும் என்று முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 30 கோடி லீட்டர் கடல் நீரை குடிநீராக மாற்றும் நிலையத்தை சென்னைக்கு அருகே அமைக்க திட்டமிடப்பட்டது. இதற்கு ரூ.1000 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற மேலும் பல நிலையங்கள் கிழக்கு கடற்கரை சாலை நெடுகிலும் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. குறுவை நெல் சாகுபடிக்கு காவிரி நீர் திறக்க வாய்ப்பு இருப்பதாகவும் கருணாநிதி தெரிவித்தார்.

திருவாரூர் சென்றுவிட்டு சென்னை திரும்பும் வழியில் கடலூரில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுனாமி நிவாரணப்பணிகளில் தொண்டு நிறுவனங்கள் மட்டுமே சில வீடு களைக் கட்டிக்கொண்டுத்துள்ளன. அரசு நிவாரண உதவிகள் முழுமையாகச் சென்றடையவில்லை என்று பலர் புகார் மனுக்கள் அளித்துள்ளனர் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேட்டூர் அணையில் காவிரிநீர் திருப்திகரமாக உள்ளது. சட்டசபை நடந்துகொண்டு இருக்கும் நேரம் வெளியே எதுவும் சொல்லக்கூடாது. குறுவைக்கு காவிரி நீர் திறக்கும் வாய்ப்பு வரலாம். அத்துடன் சேது சமுத்திரத்திட்டமும் வேகமாக நடந்து கொண்டு இருக்கிறது என்றார். (து)

# பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு இடம்; பரிசீலிப்பதாகக் கூறுகிறது அமெரிக்கா!

(வாஷிங்டன்)

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினர் ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற சர்வதேச உறவுகள் குழுவின் ஆசிய பசுபிக் துணை கமிட்டிக் கூட்டத்தில் அதன் தலைவர் ஜேம்ஸ் லீச் எழுப்பிய கேள்விக்கு அமெரிக்க வெளியுறவுத்துறையின் தெற்காசிய மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உயர் அதிகாரி ரிச்சர்ட் பௌச்சர் இவ்வாறு பதில் அளித்தார்.

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி அளிப்பது இந்தியாவின் நலன்களுக்கு மட்டுமன்றி அமெரிக்க நலன்களுக்கும் மிகவும் பொருத்தமானது என்று ஜேம்ஸ் லீச் கூறியிருந் தார்.

அவருக்குப் பதில் அளித்த ரிச்சர்ட் பௌச்சர் மேலும் கூறுகையில்,

புதிய பாதுகாப்பு கவுன்சில் என்பது 1940களின் யதார்த்த நிலவரத்தைவிடவும் இன்றைய யதார்த்த நிலவரத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்பதை அமெரிக்கா அங்கீகரித்திருக்கிறது.

வெளிநாட்டு உறவுகளில் குறிப்பிடத்தக்க பண்புகளை குறிப்பிடத்தக்க அணுகுமுறைகளை நம்முடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய இந்தியா போன்ற நாடுகள் இருப்பதையும் அவற்றுடன் முக்கியத்துவம் வாய்ந்த உறவுகள் வெகு வேகமாக வளர்ந்து விரிவடைந்துவருவதையும் அமெரிக்கா உணர்ந்திருக்கிறது. இந்த நாடுகள் குறிப்பாக இந்தியா உலக அரங்கில் முக்கிய பங்காற்ற முடியும்.

ஐ.நா.சீர்திருத்தம் என்ற பரந்த பின்னணியில் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு இடம் என்ற கோரிக்கையை அமெரிக்கா மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்கும் என்றார். (து)



அமெரிக்க கப்பற்படையில் 25 ஆண்டுகள் பணியாற்றிய மிகப்பெரிய போர்க்கப்பல் ஓரிஸ்கானிக்கு நிரந்தர ஓய்வு கொடுக்கும் விதமாக அக்கப்பல் வெடி வைத்து தகர்க்கப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

குற்றமற்றவரை - ஒன்றும் அறியாதவரை - நிராகரித்து கண்டிப்பது எவ்வளவு வெட்கக் கேடான காரியம்.

-சாக்கிரட்டீஸ்

வலம்புரி

## அல்லைப்பிட்டி மக்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படவேண்டும்

அல்லைப்பிட்டியில் இரவு வேளை நடந்த கொடூரமான படுகொலையால் அந்த ஊர் மக்கள் பயப்பீதியால் உறைந்துபோயுள்ளனர்.

ஊர்த்தொடர்புகள் அற்ற, உடனுக்குடன் தகவல்களை பரிமாறிக்கொள்ள முடியாத, கடற்படையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற அந்த மக்கள் பயந்து போய் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இரவு என்றால் இருள் எங்ஙனம் வெளிச்சத்தை கௌவிக்கொள்கிறதோ அதேபோல் அல்லைப்பிட்டியில் உள்ள மக்களை இரவு வேளை பயப்பீதி பற்றிப்பிடிக்கிறது.

யாருமே தமக்குத் துணை இல்லை என அந்த மக்கள் நினைத்துக்கொள்கிறார்கள்.அந்த நினைப்பில் நியாயம் இருக்கவே செய்கிறது.

அரச அதிகாரிகள்,அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பகல் வேளைகளில் அல்லைப்பிட்டி மக்களைச் சென்று பார்வையிடலாம். அது அவர்களுக்கு தற்காலிக ஆறுதலைக் கொடுக்கலாம். ஆனால் இரவானதும் அந்த படுகொலை நினைப்பல்லவா? அவர்களை உலுக்குகிறது.

குறிப்பாக பெண்கள் ,குழந்தைகள்,சிறுவர்கள் அந்தப் படுகொலையால் உளப்பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். அவர்களை ஆற்றுப்படுத்துவது முதற் கடமை.

ஆனால், அதற்கு முதல் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களை ஆற்றுப்படுத்துவதாயின் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

அதாவது யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அவர்கள் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக அல்லைப்பிட்டிக்குச் சென்று அங்குள்ள மக்களைப்பார்வையிட்டார்.

இவர்களுடன் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புகளும் சென்றிருந்தன.

அந்த மக்கள் அவர்களிடம் உருக்கமான ஓர் கோரிக்கையை முன்வைத்தார்கள். ஐயா! எங்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தாருங்கள். இல்லையேல் எங்களை வன்னிப்பெருநிலப்பரப்பிற்கு அனுப்பிவையுங்கள்.

அல்லைப்பிட்டி மக்களின் இந்தக்கோரிக்கையை சாதார்ணமானதாக எவரும் கருதி விடமுடியாது. இது உயிருடன் சம்பந்தப்பட்டது. அந்த மக்களின் வாழ்வியலோடு தொடர்பு பட்டது.

உயிருக்காகப் பயந்து கொண்டு எப்படி அந்த மண்ணில் வாழ்வது? கடற்படையினர் அங்கு நிலை கொண்டிருந்தபோதே அல்லைப்பிட்டி மக்கள் தமது சொந்த மண்ணில் மீளக்குடியமர்ந்தனர்.

அவ்வாறு அவர்கள் குடியமர்ந்தபோது என்ன நினைத்திருப்பார்கள்? யாழ்ப்பாண நகரத்தில் இருந்து பண்ணைக்கடல் வெளிதாண்டியுள்ள இந்த ஊரில் நாம் தனியாகக் குடியேறியுள்ளோம்.

ஏதோ கடற்படையினர் நமக்கு எதுவும் செய்ய மாட்டார்கள். அவர்களால் எங்களது உயிருக்கு உடைமைக்கு எந்த ஆபத்தும் வராது. இப்படியல்லவா அவர்கள் நினைத்தார்கள்.

அந்த நினைப்புகளுக்கு எல்லாம் ஒரு கணத்தில் சாவு மணி அடிக்கப்பட்டது. இரவு வேளை உறங்கிக் கொண்டிருந்த பச்சிளம் குழந்தைகள் உட்பட குடும்பமே அழிக்கப்பட்டது.

அந்தோ! என்னே பயங்கரம்! இந் நிலையில் அந்த மக்களின் உருக்கமான கோரிக்கை சரியான முறையில் பரிசீலிக்கப்படுவது கட்டாயமானதாகும்.

# படுகொலைகள் குறித்து விரிவான விசாரணைகள் நடத்த வேண்டும்

## போருக்கு எதிரான அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

யாழ்.தீவகம் உள்ளிட்ட தமிழர்கள் மீதான படுகொலைகளைச் சம்பவங்கள் குறித்து விரைவான விசாரணை நடத்த போருக்கு எதிரான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை, திருமலை விக்னேஸ்வரன் படுகொலை, திருமலை 5தமிழ் இளைஞர்கள் படுகொலை,கொழும்பில் 5 தமிழர்கள் தலை துண்டிப்பு , ஊர்காவற்றுறை 13 தமிழர்கள் படுகொலை மற்றும் வவுனியா உள்ளிட்ட இடங்களில் நடந்த பல்வேறு படுகொலைகள் குறித்து அரசாங்கம் உரிய விசாரணைகளை நடத்த வேண்டும்.

இவை தொடர்பிலான விசாரணைகள் இதுவரை தொடங்கப்படவில்லை. இப் படுகொலைகளுக்கான விசாரணை ஆணையம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்க வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் அனைத்து வகையான வன்முறைகளையும் கைவிட வேண்டும்.

சிங்களப் பேரினவாத அமைப்புகளான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவை மஹிந்த ராஜபக்ஷவை போருக்குத் தூண்டி வருகின்றன.

1971 மற்றும் 1988-89களைப் போன்று தனது அரசியல் இலாபங்களுக்காக ஜே.வி.பியினர் நாட்டை போருக்குத் தூண்டுகின்றனர்.

ஜனாதிபதியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் பேச்சுக்களை நடத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கவேண்டும் . முன்னைய ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்தபோதும் மிகவும் தாமதமானது. சிறுபான்மையினருடனான அதிகாரப் பகிர்வானது மிகவும் அவசியமானது பெரும்பான்மை மக்கள் அதற்குத் தயாராக உள்ளனர்.

புதிய அரசியல் அமைப்பின் கீழ் வடக்கு-கிழக்கிற்கு என்ன செய்ய இயலும் என்பதற்கான பணிகளை முன்னெடுக்க அரசியல் யாப்பு விவகார அமைச்சுக்கு மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட வேண்டும்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஜெனீவாப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும். ஜெனீவாவின் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் நிறைவேற்ற வேண்டும். ஜெனீவாப் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதன் மூலமே இருதரப்பு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# கண்காணிப்புப் பணிகள் இலங்கையில் தொடரும்

## க.கா. குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஒருபோர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்குப் பதிலாக தற்போது ஒரு போரையே கண்காணிக்கும் நிலையில் இருக்கின்ற போதிலும், தாம் இலங்கைத் தீவை விட்டு வெளியேறப் போவதில்லை என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போர்நிறுத்தம் வெறுமனே எழுத்தளவில் மாத்திரந்தான் இருக்கீன்றது என்றும், ஆயினும் அதன் பிரசன்னத்தைப் பேணுவது அவசியமானதே என்றும் பிபிசிக்கு வழங்கிய செவ்வியொன்றில் கண்காணிப்புக் குழுவின் தலைவரான உல்ஃப் ஹென்றிக்சன் கூறியுள்ளார்.

அண்மைய காலங்களில் வன்செயல்கள் அதிகரித்ததையடுத்து அனேகமாக 300 பேர் அங்கு கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து இலங்கையில் நான்கு வருடமாக போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் செயற்படுகிறார்கள்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மிகவும் கடுமையாக போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக கடந்த மாதம் அவர்கள் தெரிவித்தனர். இரு தரப்புக்கும் இடையிலான பல மோதல்களில் கண்காணிப்பாளர்களும் அகப்பட்டுக் கொண்டனர். அவற்றில், அண்மையில் நடந்த நிகழ்வு மிகவும் மோசமானது.

கண்காணிப்பாளர்கள் இலங்கை கடற்படையின் துருப்புக் காவிக் கப்பல் ஒன்றுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த போது , அந்தக் காலத்தில் கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்திருந்தும், விடுதலைப் புலிகள் அதனைத் தாக்கினார்கள்.

எவ்வாறான போதிலும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் இலங்கையில் இருப்பது முக்கியமானது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை தாம் முறித்துக் கொள்வதாக இருந்தால், அதன் பின்னர் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான ஒரு தளமும் இல்லாமல் போய்விடும் என்றும், அத்தோடு எவ்வளவு காலத்துக்கு இலங்கையில் கண்காணிப்புக்குழு இருக்கிறதோ, அவ்வளவு காலத்துக்கு போர்நிறுத்தத்தையும் தாம் கண்காணிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளவோ அல்லது இங்கிருந்து செல்லவோ மாட்டாது என்றும் அவர் கூறினார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதை தொடர்ந்து, இதுவரை காலத்தில் இலங்கை சந்தித்த மிகவும் மோசமான நெருக்கடி சூழ்நிலையில் தற்போது, கண்காணிப்புக் குழுத் தலைவரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இலங்கையில் பொருளாதார நிலை சீரழிவதாக கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலைமை சீரழிந்து கொண்டிருப்பதாக முன்னாள் பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் இதுதொடர்பில் கருத்துக் கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சி 6.6 வீதமாக இருந்தது. ஆனால் சர்வதேச சமூகத்தின் கடன் சலுகைகளைப் பெற்றுக் கொண்ட போதும் அந்தப் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தவறிவிட்டது.

விவசாயத்துறை 1.5 வீதம் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகத்தில் 1.6 விழுக்காடு வளர்ச்சியடைந்திருந்தது.

நாட்டினது வாழ்க்கைச் செலவீனம் இரட்டை இலக்க நிலையை எட்டியுள்ளது. எமது நிர்வாகத்தின்போது வாழ்க்கைச் செலவினம் 3 முதல் 6வீதம் என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. தற்போது 11.6 வீதமாக உயர்ந்துள்ளது. வங்கி வட்டி வீதமும் 9.5 இலிருந்து 12.2ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்க டொலர் மற்றும் ஸ்டேர்லிங் பவுண்டுக்கு எதிராக மட்டுமல்லாமல் இந்திய மற்றும் பாகிஸ்தான் பணத்துக்குமான நாட்டின் பண மதிப்பு குறைந்துபோயுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த வருவாய் 400 மில்லியன் ரூபாவுக்கும் குறைவானது. ஆனால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் மற்றும் வட்டி மதிப்போ அதை விட அதிகமானது என்றார். (கு)

# இருதரப்பும் பேச்சுக்கு திரும்ப வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டும் என்று அமெரிக்க வலியுறுத்தியுள்ளது.தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான் அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் ரிச்சர் பௌச்சர் இது தொடர்பில் கூறுகையில், இலங்கையில் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறைகள் அதிகரித்துள்ளன. இதனால் மீண்டும் ஒரு யுத்தத்தை நோக்கி அந் நாடு திரும்பியுள்ளது.

இணைத் தலைமை நாடுகளுடன் அமெரிக்கா இணைந்து செயற்படுகிறது. இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பொறுமை காத்து பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும்.ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் அதிகரித்த வன்முறைகளால் அமைதி முயற்சிகள் முடங்கிப் போயுள்ளன என்றார். (கு)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



மரத்தின் வேருக்கு நீரை ஊற்று. அது முழு மரத்திற்கும் நீர் பாய்ச்சியதற்கு ஒப்பாகும். இறைவனை முதலில் பற்றிக்கொள். அதன் மூலம் அனைத்தையும் நீ பெறுவாய். 'நான், எனது' எனும் எண்ணங்களை விட்டுவிடு. உலகில் தனக்கென எதுவும் இல்லாதவனை நாடியே இறைவன் வருகிறார்.

சுவாமி விவேகானந்தர்

## போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் போராளி வீரச்சாவடைந்துள்ளார்.

நீலன் (வயது 23) என்ற போராளியே வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு எல்லைப் பகுதியான பனிச்சங்கேணி மாங்கேணியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் இச் சம்பவம் நடந்துள்ளது.

போராளி நீலன் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றபோது இத் தாக்குதல் நடந்ததாக மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார். (ச-05)

# சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைக்கு ஈ.பி.டி.பி.மறுப்பறிக்கை வெளியிட்டுள்ளது

(கொழும்பு)

அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற கொலைகளுக்கு ஈ.பி.டி.பியும் சம்பந்தப்பட்டுள்ளது என்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையை ஈ.பி.டி.பி.அமைப்பு மறுத்துள்ளது. இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை அவ்அமைப்பு வெளியிட்டுள்ளது அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ் பேசும் மக்கள் சந்தித்து வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அக்கறை காட்டி வருவதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனாலும்... ஆதாரங்களையும் அதற்கான தகவல்களையும் சரிவர உறுதிப்படுத்தாமல் அறிக்கை வெளியிட்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அவசர நடவடிக்கை அந்த அமைப்பின் மீதான நம்பகத்தன்மை மீது சந்தேகங்களை கிளப்பியிருக்கிறது.

யாழ்.தீவகத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிக் குடிமக்கள் எமது நீண்ட கால உறுப்பினர்களது உறவினர்களாகவும் எமது கட்சியின் ஆதரவாளர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்ற துயரத்தையும் நாம் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

இந் நிலையில் ஈ.பி.டி.பியினராகிய எமது உறுப்பினர்களும் இந்தப் படுகொலை சம்பவ இடத்தில் நின்றிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்திருக்கும் அறிக்கை உண்மைக்கும் நேர்மைக்கும் மாறான கருத்தாகும்.

எமது மண்ணில் நடக்கும் படுகொலைகளை சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்துவதிலும் அம்பலப்படுத்துவதிலும் ஈ.பி.டி.பி. முடிந்தளவு பங்காற்றி வந்திருக்கிறது.

தொடரும் படுகொலைகளுக்கான பொறுப்பையும் தாமே புரிந்துவிட்ட படுகொலைகளுக்கான பழியையும் ஈ.பி.டி.பி. மீது சுமத்துவது புலிகளின் பொய்யான பரப்புரைகளாகும்.

இந்த வரிசையில் யாழ்.தீவகத்தில் நடத்தப்பட்டிருக்கும் படுகொலைகளுக்கான சம்பவத்தையும் எம் மீது சுமத்தியிருக்கின்றார்கள். வடக்கு கிழக்கில் இருந்து இன்று செயலாற்றி வரும் கண்காணிப்புக் குழுவினரோ அல்லது மனித உரிமை ஆணைக்குழுவினரோ இந்தப் படுகொலையோடு எம்மை சம்பந்தப்படுத்தியிருக்க வில்லை.

இன்னொரு ஆசிய நாடொன்றில் இருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான தகவல் தொடர்பாளர் கொடுத்த தவறான தகவல்களை வைத்து ஈ.பி.டி.பி. மீது சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைமைக் காரியாலயம் பழிசுமத்தியிருப்பது உண்மைக்கும் நீதிக்கும் மாறான செயலாகும்.

பொறுப்பான செயலுக்குரிய சர்வதேச மன்னிப்புச் சபை தவறான தகவலை வைத்து பொறுப்பற்ற முறையில் அறிக்கை வெளியிட்டிருப்பதால் பாதகமான சில விளைவுகளைத் தோற்றுவித்திருக்கின்றது.

ஆகவே, உண்மைக்கு புறம்பான வகையில் உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட உங்கள் பிரதிநிதியின் தவறான தகவல் குறித்து நீங்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

உண்மையான கொலையாளிகளை கண்டு பிடிக்க சர்வதேச மன்னிப்புச் சபை முன்வரவேண்டும். அதற்கு பக்க பலமாக நின்று உழைக்க ஈ.பி.டி.பி.தயாராக இருக்கின்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-05)

# இலங்கை அகதிகள் நடுக்கடலில் தவிப்பு

(இராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து இந்தியா செல்லும் இலங்கை அகதிகள் நடுக்கடலில் மணல் திட்டில் உயிருக்குப் போராடுவதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர்களை மீட்க இந்திய கடலோரக் காவல் படையினர் விரைந்து செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் மோதல் வலுத்து வருவதால் போர் பதற்றம் அதிகமாகியுள்ளது. இராணுவத்தினரின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் தினமும் பலர் வயது வித்தியாசமின்றி இந்திய செல்கின்றனர்.

இந் நிலையில் திருகோணமலையில் இருந்து 9 குடும்பங்களைச் சேர்ந்த 13 பெண்கள் 8 குழந்தைகள் உட்பட 38 பேர் 2 பிளாஸ்டிக் படகில் ஏறி தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கு நேற்று முன்தினம் சென்றனர்.

அகதிகளாக வந்தவர்கள் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். பின்னர் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

படகுக்குக் கொடுக்கக்கூட காசில்லாமையால் கழுத்தில் காதில் கிடந்த நகைகளைக் கொடுத்து உயிர்தப்பி வந்ததாக அவர்கள் கூறியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-05)

## துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கஸ்தூரியார் வீதியில் நேற்றுக் காலை 11 மணியளவில் இராணுவத்தின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து அப்பகுதியில் நின்ற மக்கள் பதற்றத்துடன் ஓடிமறைந்தனர். எனினும் சில நிமிடத்தில் நிலைமை சீரடைந்தது.

இதேவேளை கல்வியங்காடு முத்திரைச் சந்திப் பகுதியில் நேற்றுக்காலை 9மணிக்கு இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டது. இதனையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இச் சம்பவத்தில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ச-15,132,133)

# சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவல்குடா வாவிக்கு அருகில் பழுதடைந்த நிலையில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்னதாக இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என கருதப்படும் இவர்களின் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் ஒன்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் மற்றைய சடலத்தில் அடிகாயங்களும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் உள்ள மக்களை ஒரு சில தினங்களில் அங்கிருந்து வெளி யேறுமாறு தீவக பொங்கியெழும் மக்கள் படை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அப் பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அல்லைப்பிட்டியில் மக்களுக்கு பாது காப்பு இல்லை எனவும் இதனாலேயே அவர்களை வெளியேறுமாறு கேட்டுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-05)



மன்னார் பேசாலையில் இருந்து இந்தியா சென்ற ஈழத்தமிழர்கள் தமிழகம் மண்டபமுகாமில் வைத்து பொலிஸாரால் சோதனையிடப்படுவதை காணலாம்.

## கடைமீது கைக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியாவில் நேற்று பிற்பகல் கடை ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட் டுள்ளது. இக் கைக்குண்டுத் தாக்குதலில் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

இதேவேளை இக் கைக்குண்டுத் தாக்குதலையடுத்து கடைகள் பூட்டப்பட்டன. மக்கள் உடனடியாக வீடுகளுக்குத் திரும்பினர். (ச-09)

## ஓமந்தையில்...

ஒருவர் வவுனியா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே வவுனியா சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் 1.45 மணியளவில் இராணுவம் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## இலங்கை நிலவரம் குறித்து முழுமையான தகவல் தெரியாது

### தமிழக முதலமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

தேவைப்படும் பட்சத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசாங்கத்தை தலையிட வலியுறுத்துவோம் என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைதி நிலவவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் அதில் இந்திய அரசு தலையிடவேண்டுமென்று வலியுறுத்துவீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த கருணாநிதி அவர்கள்;

இலங்கையின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து தனக்கு முழுமையான தகவல்கள் தெரியாது என்றும் அது பற்றி முழுமையான தகவல்கள் தெரிந்த பிறகே தன்னால் கருத்து கூற முடியும் என்றும் பதிலளித்தார்.

முழுமையான நிகழ்வுகளை அறிந்து தேவைப்பட்டால் அது குறித்து மத்திய அரசிடம் எடுத்துச் செல்வேன் என்றும் கருணாநிதி கூறினார். (ச-05)

## பயங்கரவாதப் பட்டியலில்...

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு சேர்க்கப்பட்டுள்ளதாக சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் குறித்து இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஊடகங்களில் வெளியாகியது போல் தமிழீழ விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதப்பட்டியலில் உள்ளடக்குவதா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகள் பரிசீலனைமேற்கொண்டு வருகின்றனவே அன்றி இதுவரை பயங்கரவாதப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் எடுக்கும் முடிபை அடுத்தே உறுதியான முடிவெடுக்கப்படும். இதற்கு சில காலம் எடுக்கும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிபு குறித்து கடந்த 17 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் விபரமான உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அப்படியிருந்தபோதும் பல ஊடகங்களில். தலைப்புச் செய்தியாக தவறான செய்திகளை வெளியிட்டமை குறித்து அரசியல் ஆய்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-05)




04.05.2006 முதல்
10.30,2.30,6.30,9.30
மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்ஷன்
கிங்கொங்
(KING KONG)
தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.[illegible] இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 20.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.